BC-4

## சுருக்கம்

அறிவிப்புகள் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110 –ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – பட்டியலிடப்பட்ட மத்திய கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாணவர் ஒருவருக்கு 2 இலட்சம் ரூபாய் வரை முதற்கட்டமாக 100 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்க ரூ.2 கோடியினை ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை

அரசாணை (நிலை) எண். 72

நாள் 12.11.2019
விகாரி, ஐப்பசி 26
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது :-

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 20.07.2019.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.டி1/5357/2019, நாள் 05.08.2019 மற்றும் 22.08.2019.

---

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "பட்டியலிடப்பட்ட மத்திய கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் 2–லட்சம் ரூபாய்க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாணவர் ஒருவருக்கு 2–லட்சம் ரூபாய் வரை முதற்கட்டமாக 100 மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு 2–கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்து வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் 20.07.2019 அன்று வெளியிட்டார்.

2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குட்பட்டு இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைகளின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறை மூலம் சேர்ந்து தொழிற்கல்வி பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியருக்கு அரசு/அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களின் அடிப்படையில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை **(UG Courses)** பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு வருமான வரம்பு உள்ளிட்ட எவ்வித நிபந்தனைகளும் இன்றி கல்வி உதவித்

தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும், மேற்கண்ட அனைத்து திட்டங்களிலும் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பயிலும் தமிழக மாணவ/ மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது எனவும், ஆனால் பிறமாநிலங்களில் உள்ள கல்லூரிகளில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்க்கு கல்வி உதவித்தொகை எதுவும் வழங்கப்படுவதில்லை எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலே பத்தி 1–ல் காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியர்களின் கல்வியினை ஊக்கப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு மற்றும் பிறமாநிலங்களில் உள்ள பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைகழகங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இதர மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவ/ மாணவியருக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கல்வி உதவித்தொகையாக மாணவர் ஒருவருக்கு ரூ.2.00 இலட்சம் வரை முதற்கட்டமாக 100 மாணவ / மாணவியருக்கு வழங்குவதற்கு ரூ.2.00 கோடியை (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும், தகுதியான விண்ணப்பங்கள் 100–க்கு மேற்படின் மொத்த நிதி ஒதுக்கீட்டிற்குள் கல்வி உதவித் தொகை வழங்க பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறை இயக்குநர் / ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்குமாறும் கோரியுள்ளார்:-

அ) இக்கல்வி உதவித் தொகையினைப் பெற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

ஆ) தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இ) ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைகழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

ஈ) பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்.

உ) இதர கல்வி உதவித் தொகை திட்டங்களைப் போன்றே (பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவச கல்வி – பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு (ம) தொழில் கல்வி) இத்திட்டத்திலும் மாணவ / மாணவியரின் படிப்பிற்கான காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித் தொகை வழங்கலாம்.

ஊ) மத்திய பல்கலைகழகங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியர்க்கு கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களான கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக் கட்டணங்களுக்காக செலுத்திய தொகையாக மாணவர் ஒருவருக்கு அதிக பட்சமாக ரூ.2,00,000/–ஐ வழங்கலாம்.

எ) கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக் கட்டணம் முதலான மொத்தத் தொகை, கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ.2.00 இலட்சத்திற்கு உட்பட்டு இருப்பின், மேற்படி கட்டணங்களுக்கு செலுத்திய தொகையை மட்டும் வழங்கலாம் என்றும் மீதத் தொகையினை விண்ணப்பங்கள் 100–க்கு மேற்பட்ட தகுதியான மாணவர்களிடமிருந்து பெறப்படும்போது மொத்த நிதி ஒதுக்கீட்டிற்குள் கல்வி உதவித் தொகை வழங்கப்பட வேண்டும்.

ஏ) தகுதியான விண்ணப்பங்கள் 100–க்கு மேற்படின் மாணவ / மாணவியர் +2 தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் பரிந்துரையை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைகழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/ மாணவியருக்கு நபர் ஒருவருக்கு கல்வி உதவித் தொகையாக கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக் கட்டணம் ஆகிய கட்டணங்களுக்காக செலுத்திய தொகை அல்லது ரூ.2,00,000/–(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) வழங்குவதற்கு முதற்கட்டமாக 100 மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக மேலே பத்தி 3 (அ) முதல் (ஏ) வரையுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கிட ரூ.2,00,00,000/–ஐ (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், மேற்படி கல்வி உதவித்தொகை வழங்க பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்குநர் / ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>பிற்படுத்தப்பட்டோர் நலம் 60 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.1,20,00,000/–:</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் – 277 – கல்வி மாநில செலவினங்கள் – JF மெட்ரிக்குலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை – 312 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.

பழையது – (த.தொ.கு.2225–03–277–JF- 1209)

IFHRMS - (த.தொ.கு.2225–03–277–JF- 31209)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் 40 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.80,00,000/–:</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் – 277 – கல்வி மாநில செலவினங்கள் – KF மெட்ரிக்குலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை – 312 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.

பழையது – (த.தொ.கு.2225–03–277–KF- 1209)

IFHRMS - (த.தொ.கு.2225–03–277–KF- 31209)

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.55847/நிதி(பி,மி.பி (ம) சிந)/2019, நாள் 07.11.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை–5.

மாநில கணக்காயர், சென்னை–18.

மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.

நகல் :-

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.

மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9

அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.

அரசு கூடுதல் செயலாளரின் நேர்முக எழுத்தர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.

நிதி (பி, மி.பி)த் துறை,சென்னை –9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்(பிந3) நலத்துறை, சென்னை–9.

இருப்பு கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

அரசு சார்புச் செயலாளர்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்

(ம) சிறுபான்மையினர் நலத் துறை

தலைமைச் செயலகம், சென்னை-600 009